PlanetRead

Literacy for a Billion

Movie: Indhira
Year: 1995

Song: Thoda Thoda
Lyricist: Vairamuthu

தொடத்தொட
மலர்ந்ததென்ன
பூவே தொட்டவனை
மறந்ததென்ன
தொடத்தொட
மலர்ந்ததென்ன
பூவே தொட்டவனை
மறந்ததென்ன
பார்வைகள் புதிதா
ஸ்பரிசங்கள் புதிதா
மழை வரவும்
மறுப்பதென்ன
பார்வைகள் புதிதா
ஸ்பரிசங்கள் புதிதா
மழை வரவும்
மறுப்பதென்ன
தொடத்தொட
மலர்ந்ததென்ன
பூவே தொட்டவனை
மறந்ததென்ன
அந்த இள வயதில்
ஆற்றங்கரை மணல்
காலடி தடம் பதித்தோம்
யார் அழித்தார்
நந்தவன கரையில்
நட்டு வைத்த செடியில்
மொட்டு விட்ட முதற் பூவை
யார் பறித்தார்
காதலர் தீண்டாத
பூக்களில் தேன் இல்லை
இடைவெளி தாண்டாதே
உன் சுகம் நான் இல்லை

தொடத்தொட
மலர்ந்ததென்ன
பூவே சுடச்சுட
நனைந்ததென்ன
பார்வைகள் புதிது
ஸ்பரிசங்கள் புதிது
நரம்புகள் பின்ன பின்ன
நடுக்கம் என்ன
தொடத்தொட
மலர்ந்ததென்ன
பூவே சுடச்சுட
நனைந்ததென்ன
பனிதனில் குளித்த
பால்மலர் காண
இருபது வசந்தங்கள்
விழி வளர்த்தேன்
பசித்தவன் அமுதம்
பருகிடத்தானே
பதினேழு வசந்தங்கள்
இமை வளர்த்தேனே
இலை மூடும் மலராக
இதயத்தை மறைக்காதே
மலர்கொள்ளும் காற்றாக
இதயத்தை உனக்காக
தொடத்தொட
மலர்ந்ததென்ன
பூவே சுடச்சுட
நனைந்ததென்ன
பார்வைகள் புதிதா
ஸ்பரிசங்கள் புதிதா
மழை வரவும்
நீ மறுப்பதென்ன

தொடத்தொட
மலர்ந்ததென்ன

பூவே தொட்டவனை
மறந்ததென்ன

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*

*PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.*